Name of the Newspaper: Dinamani Date: 30.11.17

# மெட்ரோ ரயில் ஸ்மார்ட் அட்டையை 5 ஆண்டு வரை பயன்படுத்தலாம்!

சென்னை, நவ.29: சென்னை மெட்ரோ ரயிலில் பயணம் மேற்கொள்வதற்கு வழங்கப்படும் ஸ்மார்ட் அட்டையில் இப்போது பல்வேறு மாற்றங்களும் சலுகைகளும் வழங்கப்பட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இனி ஸ்மார்ட் அட்டையை 5 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம். அதிகபட்சமாக ரூ 2 ஆயிரம் வரை ரீசார்ஜ் செய்து கொள்ளலாம். இதில் ரூ.10 ஸ்மார்ட் அட்டை வழங்குவதற்காக கழித்துக் கொள்ளப்படும். ஸ்மார்ட் அட்டை மூலம் பயணிகள் மேற்கொள்ளும் பயணத்தில் 10 சதவீத சலுகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் அட்டை பெறுவது எப்படி?: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில், ஸ்மார்ட் அட்டையை கவுன்ட்டரில் பெற்றுக் கொண்டுதான் பயணம் செய்ய முடியும். பயணம் செய்யும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஸ்மார்ட் அட்டை வழங்கப்படுகிறது. ஸ்மார்ட் அட்டைக்கு ரூ.10 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஸ்மார்ட் அட்டை வேண்டாம் என நாம் திருப்பி அளிக்கும்போது ரூ.10 திருப்பி அளிக்கப்படும். எப்போது பயணம் செய்தாலும் இந்த ஸ்மார்ட் அட்டையை பயன்படுத்தலாம்.

ரீசார்ஜ் செய்யப்பட்ட தொகையில் இருந்து அந்த பயணத்துக்கான கட்டணம் கழிந்து கொண்டே செல்லும். பணம் குறையும்போது மீண்டும் ரீசார்ஜ் செய்து கொள்ளலாம். மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் இணையம் மூலமாக ரீசார்ஜ் செய்து கொள்ள வசதி உள்ளது.